## மொத்தத் தேசிய உற்பத்தி, வருமானம், செலவு

### பொதுவான போக்குகள்

நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தி (மொதேஉ) 1982 இல் ரூ. 897,000 இலட்சமெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டது. முன்னைய ஆண்டுடனொப்பிடுகையில் இது 15.5 சத வீதங் கொண்ட அதிகரிப்பாகும். விலை அதிகரிப்புக்களுக்காக சலுகை அளிக்குமிடத்து மொத்தத் தேசிய உற்பத்தியின் உண்மையான அதிகரிப்பு முன்னைய ஆண்டின் 4.1 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 1982இல் 4.9 சதவீதமாயிருந்தது. இக்கணிப்பீடு மேற்கொள்ளப்பட்ட 1982 இற்கான மொத்தத் தேசிய உற்பத்திச்சுருக்கியின் உள்ளடக்க மாற்றம் 10.2 சதவீதமாக மதிப்பிடப்பட்டது. இது முன்னைய இரு ஆண்டுகளின் ஒப்பிடத்தக்க மாற்ற வீதங்களைவிட கணிசமானளவில் குறைவான தாகும்.

மறுபுறத்தில் 1970 இன் நிலையான விலைகளில் அளவிடப்பட்ட மொத்த உள் நாட்டு உற்பத்தி (மொஉஉ) 1981 இன் ரூ. 207,000 இலட்சத்திலிருந்து 1982 இல் ரூ. 218,000 இலட்சமாக அதிகரித்தது. இது 5.1 சதவீதமான வளர்ச்சி வீதத்தைப் பிரதிபலித்தது. நிலையான விலைகளில் காரணி வருமானத்தின் தேறிய வெளிப் பாய்ச்சல் 1981 இன் ஏறத்தாள 300 சத வீத அதிகரிப்புடனொப்பிடுகையில் 1982 இல் குறைவான வீதத்தில் (14%) அதிகரித்தது. எனவே உண்மை யான மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 4.9 சதவீதமாக விளங்கி மொத்த உள்நாட்டு உற்பத்தியைவிட சிறிதளவில் மட்டுமே குறைவாயிருந் தது. முன்னைய ஆண்டில் மொஉஉ 5.8 சதவீதத்தில் வளர்ச்சியடைந்த வேளையில், காரணி வருமானத்தின் தேறிய வெளிப்பாய்ச்சலில் ஏற்பட்ட உயர்ந்த வீத அதி கரிப்புக் காரணமாக மொதேஉ வளர்ச்சி 4.1 சதவீதத்தில் பின்தங்கியிருந்தது.

1982 இல் மொதேஉ நடைமுறை விலைகளில் ரூ. 916,000 இலட்ச மாக மதிப்பிடப்பட்டது. முன்னைய ஆண்டைவிட இது 15.5 சதவீதங்கொண்ட வளர்ச்சியாகும். வெளிநாட்டு காரணி வருமானத்தின் தேறிய வெளிப்பாய்ச்சல் 1982 இல் நடைமுறை விலைகளில் ரூ. 19,690 இலட்சமாக விளங்கியது. ஒப்பிடு கையில் இது முன்னைய ஆண்டில் ரூ. 17,120 இலட்சமாயிருந்தது. எனினும் உண்மை நியதிகளில் வெளிநாட்டுக் காரணி வருமானத்தின் தேறிய வெளிப்பாய்ச் சல் 1981 இன் ரூ. 4,490 இலட்சத்துடனொப்பிடுகையில் 1982 இல் ரூ. 5,100 இலட்சமாயிருந்தது.

பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தரவுகளின்படி 1982 இல் இலங்கையின் குடித்தொகை 1.7 சத வீதத்தால் அதிகரித் தது. 1981இன் 150 இலட்சத்துடனொப்பிடுகையில் 1982இன் நடுவாண்டுக் குடித்தொகை 152 இலட்சமாக விளங்கியது. எனவே 1982இல் நடைமுறை

# மொத்தத் தேசிய உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி

# கைத்தொழில் மூலத்தின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி

*நிலையான (1970) காரணிச் செலவு விலைகளில்*




இலங்கை மத்திய வங்கி

விலைகளில் தலைக்குரிய மொதேஉ ரூ. 5,904 ஆக (ஐஅ டொலர்கள் 284) மதிப்பிடப்பட்டது. ஒப்பிடுகையில் 1981இல் ரூ. 5,179 ஆக (ஐஅ டொலர்கள் 267) ஆக இருந்தது. உண்மை நியதிகளில் முன்னைய ஆண்டின் தலைக்குரிய வருமானத்திலேற்பட்ட 2.4 சத வீத அதிகரிப்புடனொப்பிடுகையில் நடைமுறையாண்டில் இது 3.5 சத வீத அதிகரிப்பாக இருந்தது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் புதிய பொருளாதாரக் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து வர்த்தகம், பணிகள், போக்குவரத்து, கட்டடவாக்கம் ஆகியனவே பொருளாதாரத்தில் ஆற்றல் வாய்ந்த துறைகளாக விளங்கின. மிகக் கூடிய அளவிலான நடவடிக்கைகளின் பின்னர் கட்டடவாக்கத்துறை தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டாக வீழ்ச்சியைப் பதிவு செய்தது. எனினும் ஏனையதுறைகள், குறைந்த வீதத்திலாயினும் தொடர்ந்தும் விரிவடைந்தன. 1982இல் தயாரிப்புத்துறைமிதமானவளர்ச்சியைக் காட்டியது. 1981இல் 6.9 சதவீதங்கொண்டதமது இணைந்த உயர் வளர்ச்சிக்கு முக்கிய பொறுப்பாயிருந்த வேளாண்மை, காட்டுத்தொழில் கடற்றொழில் துறைகள் 1982 இல் 2.6 சத வீதத்தால் விரிவடைந்தன மரப்பயிர் துணைத்துறையில் தெங்கின் உற்பத்தி 1 1 சதவீதத்தால் அதிகரித்தது இறப்பர் துணைத்துறை, சிறிதளவான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்த வேளையில், தேயிலை துணைத்துறை, கூட்டப்பட்ட பெறுமதியின் 10.7 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. உணவுப் பயிர்த்துறையில் நெல்லின் கூட்டப்பட்ட பெறுமதி 1982 இல் 3.4 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

தயாரிப்பு, அகழ்வு, பயன்பாட்டுப் பணிகள் ஆகியன 5.0 சத வீதத்தால் விரிவடைந்தன. தேயிலை பதனிடலில் கூட்டப்பட்ட பெறுமதி வீழ்ச்சியடைந்த வேளையில் தயாரிப்புத் துறைக் கைத்தொழில்கள் கூட்டப்பட்ட பெறுமதியில் ஓர் வளர்ச்சியைப் பதிவு செய்தன. தயாரிக்கப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி 1982 இல் கணிசமாக அதிகரித்த வேளையில், முதன்மைக் கூட்டுத்தாபனங்களின் உற்பத்திச் சுட்டெண் 5 சத வீதமான வளர்ச்சியைக் காட்டியது.

1981இல் வீழ்ச்சியடையத் தொடங்கிய கட்டடவாக்கத்துறை, 1982இல் ஏறக்குறைய 2 சதவீதமான பாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்ததன்மூலம் அதே போக்கினைத்தொடர்ந்தது. அரசதுறையின் கட்டடவாக்க நடவடிக்கைகளில் அதிகரிப்புக் காணப்பட்டது. இவ்வதிகரிப்பு இல்லாதிருந்தால் கட்டடவாக்கத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி மிகப்பெரும் அளவில் இருந்திருக்கும். வர்த்தகம், போக்குவரத்து, ஏனைய பணிகள் ஆகியவற்றின் வளர்ச்சி ஏறக்குறைய 6.9 சதவீதமாயிருந்தது.

### 1982இல் துறைவகைப்படியான செயலாற்றம்

1978 - 82 காலப்பகுதியில் பலவகையான துறைகளின் வளர்ச்சிப் போக்குகள் அட்டவணை 1.7 இல் கொடுக்கப்பட்டுள்ளன. 1981 இல் முக்கியமான வளர்ச்சி முகவராயிருந்த வேளாண்மைத்துறை 1982 இல் கடுமையான பின்னடைவிற்கு

உட்பட்டிருந்தது. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் ஆகிய துறைகளில் கூட்டப்பட்ட பெறுமதியிலேற்பட்ட சிறிதளவான அதிகரிப்பு 1981 இல் பெறப்பட்டவற்றில் ஏறக்குறைய 40 சதவீதம் மட்டுமேயாகும். 1982 இன் 13சதவீதப் பங்குக்கெதிராக 1981 இல் இத்துறை, மொஉஉ வளர்ச்சிக்கு 29சதவீதத்தை உதவியது. தேயிலையில் கூட்டப்பட்ட பெறுமதி 1982 இல் 10.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1978 இலிருந்து தொடர்ந்து விரிவைக்கொண்டிருந்த நெல்லின் கூட்டப்பட்ட பெறுமதி 1982இல் 3.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தேயிலை, நெல் ஆகிய துணைத்துறைகளில் பாதகமான வளர்ச்சி வீதங்கள் காணப்பட்ட நிலையிலும், காட்டுத்தொழில், கடற்றொழில் ஆகியவற்றை உள்ளடக்கிய வேளாண்மைத்துறை 1982இல் 2.6சதவீதத்தால் அதிகரித்தது. கடற்றொழில்துறை முன்னைய ஆண்டின் 15 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 1982 இல் 2.9 சதவீதத்தால் விரிவடைந்தது.

அகழ்வு, பார்குழித்தொழில்துறை 1982இல் 4.1 சதவீதத்தால் விரிவடைந்ததாக மதிப்பிடப்பட்டது. காரீய உற்பத்தி 1982இல் 18.1 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் இரத்தினக்கல் ஏற்றுமதிகளின் போக்கினைப் பிரதிபலிக்கும் வகையில் இரத்தினக்கல்அகழ்வு துணைத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதி வீழ்ச்சியடைந்தது. அரசதுறையின் கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட கேள்வி, அகழ்வு துணைத்துறைக்கு ஓரளவுக்கு உதவியது. எனினும், தனியார்துறையின் வீடமைத்தலில் வேகங்குறைந்தமை செங்கட்டி, மணல் போன்ற அகழ்வுத்துறையின் கட்டிடப் பொருட்களுக்கான கேள்வியைக் குறைத்தது.

தயாரிப்புத்துறையில் கூட்டப்பட்ட பெறுமதி 1982 இல் 4.8 சதவீதத்தால் அதிகரித்தது. தேயிலையின் வெளியீட்டிலேற்பட்ட வீழ்ச்சி வேளாண்மைப்பொருள் பதனிடல் துணைத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதியை 5.3 சதவீதத்தால் குறைத்தது. எனினும் தொழிற்சாலை, ஏனைய கைத்தொழில்கள் என்பன 1982 இல் விரைவாக வளர்ச்சி அடைந்தன. கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1982இல் உறுதியான அதிகரிப்பொன்றைக் காட்டின. பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்த தயாரிக்கப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி முன்னைய ஆண்டைவிட 1982இல் 17.6 சதவீதத்தால் அதிகரித்தது.

கட்டடவாக்கத்துறையில் தனியார் வதிவிட வீடமைப்பின் கட்டிட நடவடிக்கைகள் தொடர்ந்தும் 1982 இல் வீழ்ச்சியடைந்தன. எனினும் அரசதுறையில் குறிப்பாக மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும் அளவிலான கட்டடவாக்கவேலை காரணமாக கட்டடவாக்கத்துறையில் ஏற்பட்ட மொத்த வீழ்ச்சி ஏறக்குறைய ·2 சதவீதத்துக்குக் கட்டுப்படுத்தப்பட்டது.

மின்வலு, வளி, நீர், நலப்பணிகள் துறையில் ஏறக்குறைய 10 சதவீதமான வளர்ச்சி வீதம் பதிவு செய்யப்பட்டது. 1982இன் மின்வலு உற்பத்தி 10.4 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

## நிலையான (1970) விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின்துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும் 1980 — 1982

| துறை | கூட்டப்பட்ட பெறுமதி (ரூ. ப. இ) | | | மொத்தத் தேசிய உற்பத்தியில் சதவீதப் பங்கு | | | முன்னைய ஆண்டுக்கு மேலான அதிகரிப்பு (ரூ. ப. இ.) | | | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பில் சதவீதப் பங்கு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1980* | 1981* | 1982* | 1980 | 1981 | 1982 | 1980 | 1981 | 1982 | 1980 | 1981 | 1982 |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில் கடற்றொழில் | 4,766 | 5,097 | 5,231 | 24.5 | 25.2 | 24.6 | 144 | 331 | 134 | 14.0 | 41.3 | 13.5 |
| 1.1 வேளாண்மை | 4,348 | 4,636 | 4,755 | 22.4 | 22.9 | 22.4 | 109 | 288 | 119 | 10.6 | 35.9 | 12.0 |
| 1.1.1 தேயிலை | 381 | 419 | 374 | 2.0 | 2.1 | 1.8 | -31 | 38 | -45 | – 3.0 | 4.7 | – 4.6 |
| 1.1.2 இறப்பர் | 194 | 181 | 182 | 1.0 | 0.9 | 0.9 | -29 | – 13 | 1 | – 2.8 | – 1.6 | 0.1 |
| 1.1.3 தெங்கு | 462 | 515 | 573 | 2.4 | 2.5 | 2.7 | -57 | 53 | 58 | – 5.6 | 6.6 | 5.9 |
| 1.1.4 நெல் | 1,267 | 1,313 | 1,269 | 6.5 | 6.5 | 6.0 | 135 | 46 | -44 | 13,1 | 5.7 | – 4.4 |
| 1.1.5 ஏனையவை | 2,044 | 2,208 | 2,357 | 10.5 | 10.9 | 11.1 | 91 | 164 | 148 | 8.9 | 20.5 | 15.0 |
| 1.2 காட்டுத்தொழில் | 181 | 188 | 195 | 0.9 | 1.0 | 0.9 | 15 | 7 | 7 | 1.5 | 0.9 | 0.7 |
| 1.3 கடற்றொழில் | 237 | 273 | 281 | 1.2 | 1.3 | 1.3 | 20 | 36 | 8 | 1.9 | 4.5 | 0.8 |
| 2. சுரங்கத்தொழிலும் அகழ்வுத் தொழிலும் | 684 | 713 | 742 | 3.5 | 3.5 | 3.5 | 32 | 29 | 29 | 3.1 | 3.6 | 2.9 |
| 3. தயாரிப்புத் தொழில் | 2,681 | 2,820 | 2,955 | 13.8 | 13.9 | 13.9 | 22 | 139 | 135 | 2.1 | 17.4 | 13.6 |
| 3.1 ஏற்றுமதி பதனிடல் | 791 | 851 | 806 | 4.1 | 4.2 | 3.8 | -86 | 60 | -45 | – 8.4 | 7.5 | – 4.6 |
| 3.2 தொழிலக கைத்தொழில் | 1,488 | 1,548 | 1,686 | 7.6 | 7.6 | 7.9 | 71 | 60 | 138 | 6.9 | 7.5 | 14.0 |
| 3.3 சிறு கைத்தொழிலும் ஏனையவையும் | 402 | 421 | 463 | 2.1 | 2.1 | 2.2 | 37 | 19 | 42 | 3.6 | 2.4 | 4.2 |
| 4. கட்டடவாக்கம் | 1,066 | 1,034 | 1,013 | 5.5 | 5.1 | 4.8 | 106 | -32 | -21 | 10.3 | – 4.0 | – 2.1 |
| 5. மின்வலு, வளி, நீர், நலத்துறைப்பணிகள் | 209 | 234 | 257 | 1.1 | 1.1 | 1.2 | 19 | 25 | 23 | 1.9 | 3.1 | 2.3 |
| 6. போக்குவரத்து, தொடர்பூட்டல் | 1,838 | 1,957 | 2,079 | 9.4 | 9.6 | 9.8 | 122 | 119 | 122 | 11.9 | 14.9 | 12.3 |
| 7. மொத்த சில்லறை வர்த்தகம் | 3,849 | 4,034 | 4,275 | 19.8 | 20.0 | 20.1 | 298 | 185 | 241 | 29.1 | 23.1 | 24.4 |
| 7.1 இறக்குமதிகள் | 985 | 1,005 | 1,026 | 5.1 | 5.0 | 4.8 | 121 | 20 | 21 | 11.8 | 2.5 | 2.1 |
| 7.2 ஏற்றுமதிகள் | 709 | 723 | 794 | 3.6 | 3.6 | 3.7 | — | 14 | 71 | — | 1.7 | 7.2 |
| 7.3 உள்நாட்டு | 2,155 | 2,306 | 2,455 | 11.1 | 11.4 | 11.6 | 177 | 151 | 149 | 17.3 | 18.9 | 15.1 |
| 8. வங்கித்தொழில், காப்புறுதி உண்மைச் சொத்து | 402 | 462 | 517 | 2.1 | 2.3 | 2.4 | 52 | 60 | 55 | 5.1 | 7.5 | 5.6 |
| 9. குடியிருப்புகளின் உடைமை | 549 | 579 | 611 | 2.8 | 2.9 | 2.9 | 31 | 30 | 32 | 3.0 | 3.7 | 3.2 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 959 | 997 | 1,102 | 4.9 | 4.9 | 5.2 | 54 | 38 | 105 | 5.3 | 4.7 | 10.6 |
| 11. வேறு எங்கும் குறிப்பிடப்படாத பணிகள் (வே.எ.கு) | 2,572 | 2,779 | 2,974 | 13.2 | 13.7 | 14.0 | 194 | 207 | 195 | 18.9 | 25.8 | 19.7 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 19,575 | 20,706 | 21,756 | 100.6 | 102 2 | 102.4 | 1,074 | 1,131 | 1,050 | 104.7 | 141.1 | 106.2 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் | – 119 | – 449 | – 510 | – 0.6 | – 2.2 | – 2.4 | – 48 | -333 | -61 | – 4.7 | – 41.1 | – 6.2 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி | 19,456 | 20,257 | 21,246 | 100.0 | 100.0 | 100. | 1,026 | 801 | 989 | 100.0 | 100.0 | 100.0 |

* தற்காலிகம்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் துறையில் கூட்டப்பட்ட பெறுமதியின் பங்கு, ஆண்டின் முதல் அரைப்பகுதியில் முதலீட்டில் பின்னடைவொன்று காணப்பட்ட போதிலும் 1982இல் 6.2 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், முழு மொத்தக் கழிவுத்தொகை (முமொக) வரிச்சலுகை மீள அறிமுகப் படுத்தப்பட்ட பின்னர் போக்குவரத்துத்துறையின் நடவடிக்கைகள் விரிவடைந்தது டன் கூட்டப்பட்ட பெறுமதி குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.

மொத்த விற்பனை, சில்லறை வர்த்தகத்துறை 1981இன் 4.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1982இல் 6.0 சதவீதத்தால் விரிவடைந்தது. சுங்கத்தரவுகளின்படி வணிகப்பொருள்களின் இறக்குமதிகள் 1982இல் 14.7 சதவீதத்தால் அதிகரித்தன.

வங்கித்தொழில் காப்புறுதி உண்மைச்சொத்துக்கள் துறையின் வளர்ச்சி வீதம் முன்னைய இரு ஆண்டுகளின் 14.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1982இல் 12.0 சதவீதமாக வேகம் குறைந்தது. வீடுகளின் உடைமையில் கூட்டப்பட்ட பெறுமதி ஏறக்குறைய 1981 இல் காணப்பட்ட அதே வீதத்திலேயே இருந்தது. ஆயினும் நிருவாகத்தில் கூட்டப்பட்ட பெறுமதி 4 சதவீதத்திலிருந்து 10.5 சதவீதத்திற்கு அதிகரித்தது.

ஏனைய பணிகள் 1981 இன் 8சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1982இல் ஏறக்குறைய 7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. ஏனைய பணிகள்துறையில் பெரும் பங்குக்குப் பொறுப்பான சுற்றுலாத் துணைத்துறை ஏறக்குறைய 10 சதவீதத்தால் சார்பு ரீதியில் மெதுவாக விரிவடைந்தது.

வேளாண்மைத்துறையின் குறைந்த செயலாற்றத்தின் விளைவாக 1982 இல் இலங்கைப் பொருளாதாரத்தின் வளர்ச்சி குறைவடைந்தமையைக் காண முடிந்தது. நெற்றுணைத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பெரும் போகக் காலத்தில் ஏற்பட்ட பாதகமான வானிலை நிலைமைகளே பெருமளவு காரணமாகும். நெல் துணைத்துறை கடந்த நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. தேயிலை துணைத்துறையும் 1982இல் மிகக்குறைந்த செயலாற்றத்தைக் கொண்டிருந்தது. குறைந்தளவிலான தேயிலை உற்பத்தி, வேளாண்மைப் பொருட்களின் பதப்படுத்தல் துறையிலும் கூட்டப்பட்ட பெறுமதியிலேற்பட்ட குறைப்பின் தாக்கத்தைக் கொண்டிருந்தது.

இலங்கைப் பொருளாதாரத்தில், பன்னாட்டு வர்த்தக மாற்று வீதத்தின் தாக்கம் 1982 இல் தொடர்ந்தும் பாதகமானதாகவேயிருந்தது. 1982 இல் இழந்த 7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1982இல் இலங்கை, பாதகமான வர்த்தக மாற்று விகிதத்தின் காரணமாக தனது மொதேஉ இல் ஏறக்குறைய 8 சதவீதத்தை இழந்தது. 1978ஐ அடிப்படையாகக் கொண்ட வர்த்தக மாற்று விகிதச் சுட்டெண் 1981 இல் 46 இலிருந்து 1982 இல் 38 ஆக வீழ்ச்சியடைந்தது. வர்த்தக மாற்று விகிதத் தாக்கத்துக்கு இடம்விட்டு நோக்குகையில் உண்மைத் தேசிய வருமானம் 1981 இன் 3.2 சதவீத அதிகரிப்பிற்கெதிராக 1982 இல் 3.6 சதவீதத்தால் அதிரித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. உண்மைத் தேசிய வருமான மதிப்பீடுகள் புள்ளி விபரப் பின்னிணைப்பு அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI LANKA

### செலவு அமைப்பு

நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவு (மொஉசெ) 1982 இல் ரூ. 1,187,000 இலட்சமாக மதிப்பிடப்பட்டு, 1981ஐ விட 20 சதவீதம் உயர்வானதாக விளங்கியது. 1982இல் மொத்த நுகர்வுச் செலவு ரூ. 882,000 இலட்சத்துக்கு வகைகூறியது. இதில் ரூ. 800,000 இலட்சம் கொண்டதொகை தனியார் நுகர்வுக்காகச் செலவழிக்கப்பட்டவேளையில் ரூ. 82,000 இலட்சங்கொண்ட தொகை அரச நுகர்வுக்காகச் செலவழிக்கப்பட்டது. இருப்புக்களை உள்ளடக்கிய மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் (மொஉமுஆ) ரூ. 305,000 இலட்சத்துக்கு வகைகூறி, முன்னைய ஆண்டைவிட 29.0 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் (மொஉநிமூ) ரூ. 302,000 இலட்சத்துக்கு வகைகூறி நடைமுறைச் சந்தை விலைகளில் முன்னைய ஆண்டைவிட 29.9 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. அரசக் கூட்டுத்தாபனங்களும், தனியார்துறையும் இணைந்த துறையில் மொஉநி மூலதன ஆக்கம் 1982இல் 32.0 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்து ரூ. 252,000 இலட்சங்கொண்ட மட்டத்தையடைந்தது. அரச துறையினது மொஉநி மூலதன ஆக்கம் ஏறக்குறைய 21.0 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 50,000 இலட்சம் கொண்ட பெறுமதியை அடைந்தது.

இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்களின் பெறுமதி 1981 இல் 1.3 சதவீத வீழ்ச்சிக்கெதிராக 1982 இல் ஏறக்குறைய 48 சதவீதத்தால் அதிகரித்தது. 1982 இல் முக்கிய மூலதனப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதி 1981 இன் 27 சதவீத வீழ்ச்சிக்கு எதிராக 1982 இல் 156 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு, பெருமளவுக்கு இவ்வாண்டுக் காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட கப்பல்கள், விண்கலங்கள் என்பவற்றினுல் ஏற்பட்டதாகும்.

அட்டவணை 1.8

**இறக்குமதியான முதலீட்டுப் பொருட்களில் தெரிவு செய்யப்பட்ட சில விடயங்கள்**

(கொ. கா. க. பெறுமதி '000 ரூபாய்களில்)

| | விடயம் | 1979 | 1980 | 1981 | 1982 |
|---|---|---|---|---|---|
| 1. | பேருந்துகளும் பயணத்தார் வண்டிகளும் ... | 412,054 | 421,207 | 338,430 | 309,749 |
| 2. | சரக்கு வண்டிகளும் வான்களும் .. | 317,824 | 765,460 | 771,071 | 658,875 |
| 3. | பொறிகள் பொருத்தப்பட்ட அடிச்சட்டம் .. | 282,538 | 235,296 | 59,317 | 222,518 |
| 4. | இழு பொறிகள் ... | 366,214 | 370,246 | 116,148 | 86,092 |
| 5. | நிலம் சமப்படுத்தும் பொறிகள் ... | 196.168 | 512,351 | 350,451 | 362,904 |
| 6. | புகைவண்டித் தொடர்களும் பாகங்களும் . | 471,686 | 300,043 | 123,124 | 169,589 |
| 7. | வானூர்திகளும் வான்கலங்களும் .. | 33,221 | 3,725 | 760 | 2,437,599 |
| 8. | கடற்கலப் பொறிகள் படகின் வெளிப்புற பொறிகள் ... | 78,208 | 107,334 | 73,952 | 47,987 |
| 9. | கப்பல்கள், எண்ணெய்க் கப்பல்கள், இழுவைக் கப்பல்கள் | 5,218 | 6,721 | 421 | 999,3 7 |
| 10. | மின் உருவாக்கிகள் ... | 15,030 | 117,457 | 264,984 | 145,220 |
| 11. | கடைசல், அரைக்கும் பொறிகள், துளையிடற் பொறிகள் போன்றவை . | 39,079 | 91,659 | 38,591 | 35,013 |

மூலம்: இலங்கைச் சுங்கம்,

இறக்குமதி செய்யப்பட்ட பேருந்துகள், சொகுசு வண்டிகளின் பெறுமதி ஏறக்குறைய 8.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில், பொறிகள், வான்கள் ஆகியவற்றின் இறக்குமதி 15 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1981 இல் இரு மடங்காகிய மின்னுருவாக்கிகளின் இறக்குமதி 1982 இல் ஏறக்குறைய 45 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மறுபுறத்தில் பொறிகள் பொருத்தப்பட்ட அடிச்சட்டத்தின் இறக்குமதி 1981 இன் ரூ. 593 இலட்சத்திலிருந்து 1982 இல் ரூ. 2,225 இலட்சமாக அதிகரித்தது. நிலச்சமன்பாட்டுப் பொறிகளின் இறக்குமதி 3.6 சதவீதத்தால் அதிகரித்தது.

கட்டடவாக்கம் காரணமாக மூலதன அமைப்பு உண்மை நியதிகளில் 2 சதவீதமான வீழ்ச்சிக்கெதிராக பெறுமதியில் 13.4 சதவீதத்தால் அதிகரித்தது. மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் கட்டடவாக்க வேலைகளின் பெறுமதி ரூ. 65,000 இலட்சத்துக்கு வகைகூறியது.

மீளப்பயிரிடல், நில அபிவிருத்தி போன்றவற்றினால் ஏற்பட்ட மூலதனஆக்கம் 1982 இல் 16 சதவீதத்தால் அதிகரித்தது. இறப்பரில் மீளப்பயிரிடும் திட்டம் 1982 இல் ஆண்டு இலக்காகிய ஏறக்குறைய 16,800 ஏக்கர்களை விஞ்சியது. அத்துடன் ஏறக்குறைய 4,100 ஏக்கர்கள் நிலத்தில் இறப்பர் புதிதாகப் பயிரிடப்பட்டுள்ளது.

அட்டவணை 1.9

மூலதனச் செலவின் இறக்குமதி உள்ளடக்கம்

ப. இ. ரூபாய்களில்

| விடயம் | 1970 | 1980 * | 1981 * | 1982 |
|---|---|---|---|---|
| 1. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம்... | 13,246 | 20,845 | 23,279 | 30,228 |
| 2. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் (கொ. கா. க. பெறுமதி) ... | 5,091 | 7,531 | 7,431 | 11,034 |
| 3. இறக்குமதி உள்ளடக்கம் .. | 38.4 | 36.1 | 31.9 | 36.5 |

* தற்காலிகமானவை

மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

1978-80 காலப்பகுதியில் 37 சதவீத அளவில் சார்பு ரீதியில் உயர்வாயிருந்த மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கத்தின் இறக்குமதி உள்ளடக்கம், 1981 இல் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. எனினும் 1982இல் இது மீண்டும் 36.5 சதவீதமாக அதிகரித்தது.

**மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்**

1982 இல் மொத்த மூலவளக் கிடைப்பனவு, நடைமுறை விலைகளில் ரூ. 1,470,000 இலட்சங்களாக மதிப்பிடப்பட்டு, முன்னைய ஆண்டைவிட 18.0 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. உள்நாட்டு உற்பத்தியிலிருந்து ரூ. 1,003,000

அட்டவணை 1.10

## மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும் 1978 — 1982

| விடயம் | நடைமுறை சந்தை விலைகளில் (ப. இ. ரூபாய்களில்) | | | | 1978 விலைகளில் | | | | | | | | சதவீத அதிகரிப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1978 | 1980* | 1981* | 1982* | 1978 | | 1980 | | 1981 | | 1982 | | 1978 மேலாக 1979 | 1980 மேலாக 1979 | 1981 மேலாக 1980 |
| | | | | | தொகை ரூ.ப.இ. | % | தொகை ரூ.ப.இ. | % | தொகை ப.இ.ரூ | % | தொகை ரூ.ப.இ. | % | | | |
| 1. மொத்த மூலவளங்கள் .. | 59,537 | 102,983 | 124,563 | 147,027 | 59,537 | 100 | 71,600 | 100 | 75,233 | 100 | 78,328 | 100 | 11.0 | 5.1 | 4.1 |
| 1.1 மொ. உ. உ. சந்தை விலைகளில் .. | 42,665 | 66,527 | 85,005 | 100,314 | 42,665 | 72 | 47,983 | 67 | 50,766 | 67 | 53,355 | 68 | 6.3 | 5.8 | 5.1 |
| 1.2 பொருட்கள், காரணியல்லாப் பணிகளின் இறக்குமதிகள் .. | 16,872 | 36,456 | 39,558 | 46,713 | 16,872 | 28 | 23,917 | 33 | 24,467 | 33 | 24,973 | 32 | 23.0 | 3.6 | 2.1 |
| 2. பயன்பாடு .. | 59,537 | 102,983 | 124,563 | 147,027 | 59,537 | 100 | 71,600 | 100 | 75,233 | 100 | 78,328 | 100 | 11.0 | 5.1 | 4.1 |
| 2.1 நுகர்வு .. | 36,148 | 59,084 | 75,061 | 88,212 | 36,148 | 61 | 43,616 | 61 | 46,967 | 63 | 47,859 | 61 | 11.8 | 7.7 | 1.9 |
| 2.2 மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் .. | 8,521 | 20,845 | 23,279 | 30,228 | 8.521 | 14 | 12,719 | 18 | 13,045 | 17 | 13,796 | 18 | 24.0 | 2.6 | 5.8 |
| 2.2.1 அரசு .. | (3,077) | (4,709) | (4,126) | (4.993) | (3,077) | (5) | (3,804) | (5) | (3,328) | (4) | (3,346) | (4.3) | 18.0 | -12.5 | 0.5 |
| 2.2.2 அரச கூட்டுத்தாபனங்கள் .. | (2,056) | (7,553) | (19,153) | (25,235) | (2,056) | (3) | (4,433) | (6) | (9,717) | (13) | (10,450) | (13.2) | 27.4 | 9.0 | 7.5 |
| 2.2.3 தனியார்துறை .. | (3,388) | (8,583) | | | (3,388) | (6) | (4,482) | (7) | | | | | | | |
| 2.3 இருப்புக்கள் .. | 33 | 1,620 | 331 | 248 | 33 | — | 5 87 | 1 | 103 | — | 73 | — | — | — | — |
| 2.4 பொருட்களின் ஏற்றுமதிகளும் காரணியல்லாப் பணிகளும் | 14,835 | 21,434 | 25,892 | 28,339 | 14,835 | 25 | 14,678 | 20 | 15,118 | 20 | 16,600 | 21 | 1.0 | 3.0 | 9.8 |

(அ) தற்காலிகமானவை

மூலம் இலங்கை மத்திய வங்கி

இலட்சம்பெறுமதியான மூலவளங்களையும்வெளிநாட்டுத்துறையிலிருந்து ரூ.467,000 இலட்சம் பெறுமதியான மூலவளங்களையும் பொருளாதாரம் பெற்றது. மூலவளக் கிடைப்பனவில் வெளிநாட்டுத் துறையின் பங்கு 1981 இல் போலவே 31.8 சதவீத மாயிருந்தது.மூலவளப்பயன்பாட்டில் 1981இன் 60.2 சதவீதத்துக்கெதிராக 1982இல் நுகர்வு 60.0 சதவீதத்தை ஈர்த்துக்கொண்டது. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் 1981 இன் 18.7 சதவீதத்துக் கெதிராக 1982 இல் 20. 6 சதவீதத் தால் அதிகரித்தது. மொத்த மூலவளப் பயன்பாட்டில் ஏற்றுமதிகளின் பங்கு 1982 இல் 19.3 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

நடைமுறை விலைகளில் மதிப்பிடப்பட்ட மொத்த மூலவளக் கிடைப்பனவு 1982 இல் 4.1 சதவீதத்தால் அதிகரித்தது. இறக்குமதிகள் 1982 இல் 2.1 சதவீதத் தால் அதிகரித்தன. உள்நாட்டுப் பொருளாதாரத்திலிருந்தானமூலவளக் கிடைப் பனவு 1981 இன் 5.8 சதவீதத்துக்கெதிராக 5.1 சதவீதத்தால் அதிகரித்தது. நடைமுறை விலைகளில் மதிப்பிடப்பட்ட நுகர்வுச் செலவு 1982 இல் 1.9 சதவீதத் தால் அதிகரித்த வேளையில் மூலதன ஆக்கம் 1981 இன் 2.6 சதவீதத்துக்கெதி ராக 1982 இல் 5.8 சதவீதத்தால் அதிகரித்தது. பொருளாதாரத்தின் ஏற்றுமதி கள் முன்னைய ஆண்டைவிட 1982 இல் 9.8 சதவீதத்தால் அதிகரித்தன.

1982 இல் வெளிநாட்டுத் தனியார் பணவனுப்பல்கள் தவிர்ந்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ.121,000 இலட்சங்களாக விளங்கியது. உள்நாட்டுச்சேமிப்பு விகிதம் 1981 இன் 11.7 சதவீதத்துடனொப்பிடுகையில் 12.1 சதவீதமாக சிறிதளவால் முன் னேற்றமடைந்தது. வெளிநாட்டு தனியார் பணவனுப்பல்களை உள்ளடக்கி மொத்த சேமிப்புக்கள் ரூ. 153,000 இலட்சத்துக்கு வகைகூறின. 1981 ஆம் ஆண்டின் 14.3சத வீதத்துடன் ஒப்பிடுகையில் தேசிய சேமிப்பு விகிதம் 1982 ஆம் ஆண்டில் 15.3 சதவீதமாக விளங்கியது.

அட்டவணை 1. 11
தேசிய சேமிப்புகள் 1978 — 1982
(நடைமுறைச் சந்தை விலைகள்)

ப. இ. ரூபாய்களில்

| இனம் | 1978 | 1979 | 1980* | 1981* | 1982* |
|---|---|---|---|---|---|
| 1. சந்தை விலைகளில் மொ. உ. உ. ... | 42,665 | 52,387 | 66,527 | 85,005 | 100,314 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புகள் ... | 6,517 | 7,218 | 7,443 | 9,944 | 12,102 |
| 3. வெளிநாட்டு தேறிய காரணி வருவாய் ... | – 237 | – 240 | – 432 | – 1,712 | – 1,969 |
| 4. வெளிநாட்டிலிருந்தான தனியார் மாற்றல்கள் ... | 342 | 754 | 2,260 | 3,918 | 5,170 |
| 5. தேசிய சேமிப்புகள் ... | 6,622 | 7,732 | 9,271 | 12,150 | 15,303 |
| 6. உள்நாட்டுச் சேமிப்புகள் விகிதம் (1 இன் சதவீதமாக 2) .. | 15.2 | 13.8 | 11.2 | 11.7 | 12.1 |
| 7. தேசிய சேமிப்புகள் விகிதம் (1 இன் சதவீதமாக 5) ... | 15.5 | 14.8 | 13.9 | 14.3 | 15.3 |

* தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி